# அரசை வழிநடத்த அறிவாளிகள் தேவை

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இரண்டாவது தடவையாக ஆட்சியில் அமர்ந்துள்ளது. இந்தியாவில் எந்த அரசு அமைந்தாலும் அந்த அரசு உள்நாட்டுப் பாதுகாப்பு, அயலுறவு போன்ற அம்சங்களில் கடுஞ்சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியேயும் நிலவுகிறது. இச்சவால்களை எதிர் கொள்ளவும் சமாளிக்கவும் ஆயுத, இராணுவ பலம்மட்டும் போதுமானதில்லை. மேலும் இதுபோன்ற அம்சங்களில் காலகாலத்துக்கும் போராடிக் கொண்டிருப்பதே தீர்வாகவும் இருக்க முடியாது. எனவே இதற்குச் சரியான அணுகுமுறையையும் தீர்வையும் பெறவேண்டும். அறிவார்ந்த அணுகுமுறை மற்றும் நடவடிக் கைகளின் மூலம் தீர்வைப் பெறவேண்டும். அதற்குத் தகுதியான அறிவாளிகள் குழு ஒன்றை உருவாக்கி அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையில் பாதுகாப்பு, வெளியுறவு ஆகியவை உள்ளடங்கிய அனைத்து அம்சங்களிலும் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆனால் இதுகுறித்து இந்தியாவில் இதுவரை சிந்திக்கவோ முயற்சிக்கவோ செய்யப்படவில்லை.

இந்தியாவில் பதவியேற்கும் எந்த ஒரு அரசும் அதுசார்ந்துள்ள கட்சியின் உணர்வின் அடிப்படையிலேயே அனைத்துப் பிரச்சினைகளையும் அணுகுகிறது. வெளியுறவு, பாதுகாப்பு போன்ற அம்சங்களிலும் கூட அவ்வாறே நடந்து கொள்கிறது. இங்குள்ள ஒரு சில கட்சிகள் சாதியுணர்வு, பெரும்பான்மை மதவெறியுணர்வு முதலியவற்றையே மூலதனமாகக் கொண்டு இயங்குகின்றன. அப்படிப்பட்ட கட்சிகள் அரசை அமைத்துச் செயல்படும்போது மேற்படி அம்சங்களையே பிரதிபலிக்கின்றன. பா.ஜ.க.வின் தலைமையிலான அரசு பச்சையாகவே அவற்றைப் பிரதி பலித்தது. இதனால் இந்நாட்டின் குறிப்பிட்ட மக்கள் பாதிக்கப்படுவதோடல்லாமல் பாதுகாப்பும் வெளியுறவுக் கொள்கையும் ஒரு சார்பாகத் தீர்மானிக்கப்படுகிறது. இதனால் தேசத்தின் நன்மதிப்பு கெடுவதோடு தேசத்தின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது. ஆகவே தேசத்தின் கொள்கை முடிவுகளை மதசார்பற்ற அறிவாளிகள் குழு தீர்மானிக்க வேண்டும்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் அறிவாளிகளின் ஆலோசனையின்படி கொள்கை முடிவுகளை எடுப்பது நடைமுறையாக இருக்கிறது. அங்கே வெளியுறவு, பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்துக் கொள்கைகளையும் அரசுகள் தீர்மானிப்பதில்லை; அறிவாளிகள் குழுதான் தீர்மானிக்கிறது. இது தவிர அந்நாட்டின் அதிபர்கள் தனிப்பட்ட முறையிலும் ராஜாங்க ரீதியிலும் அறிவாளிக் குழுக்களின் ஆலோசனை களைக் கேட்டுத்தான் செயல்படுகின்றனர்.

வாஷிங்டனில் மட்டும் 350 பேர் கொண்ட அறிவாளிகள் குழு உள்ளது. இக்குழுவின் ஆலோசனையினடிப்படையில்தான் அமெரிக்காவில் அனைத்து முடிவுகளும் எடுக்கப்படுகின்றன. மேலும் தற்போதைய அமெரிக்கஅதிபர் பராக் ஒபாமா, ஜான் பொடஸ்டா என்ற ஓர் அறிஞரிடம் அடிக்கடி ஆலோசனை கேட்டு அதற்கேற்ப நடந்துகொள்கிறார். அந்த அறிஞரையே ''அமெரிக்க முன்னேற்றத்திற்கான அமைப்பின்'' தலைவராகவும் நியமனம் செய்துள்ளார். முன்னாள் அமெரிக்க அதிபர்களான ஜார்ஜ் புஷ் மற்றும் பில்கிளிண்டனும் புரூக்ளின் என்ற அமெரிக்க நிறுவனம் ஒன்றிடம் ஆலோசனைகள் கேட்டுத்தான் செயல்பட்டனர் என்று கூறப்படுகிறது. இப்படிப்பட்ட அறிவாளிகள் அதாவது உலகவரலாறு, புவியியல், பொருளாதாரம், உலக அரசியல் உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும் தங்களது விரல் நுனியில் வைத்திருக்கும் அறிவாளிகள் உலக அளவில் மொத்தம் 5,500 பேர் தான் இருக்கிறார்கள் என்றும், இவர்களில் வட அமெரிக்காவில் 1,872 பேரும் (34,25 சதவீதம்) மேற்கு ஐரோப்பாவில் 1,208 பேரும் (22.1 சதவிதம்) ஆசியாவில் 653 பேரும் (11,95 சதவீதம்) உள்ளார்கள் என்றும் அமெரிக்கக் கல்வியாளர் ஜேம்ஸ் என்பவர் மதிப்பீடு செய்திருக்கிறார்.

இப்படிப்பட்ட அறிவாளிகளை இந்தியாவும் உருவாக்க வேண்டுமானால் இங்கு சர்வதேசப் படிப்புகள் தரமானதாக அமைக்கப்படவேண்டும். இதை உணர்ந்துதான் சீன அரசு கல்வியில் பெரும்மாற்றங்களைச் செய்துவருகிறது. சிங்குவா, ஃபுடன், மற்றும் பெய்ஜிங் பல்கலைக் கழகங்களில் நல்ல தரமான சர்வதேசப் படிப்புகளை நடத்தி வருகிறது. படிப்புடன் கூடிய ஆராய்ச்சியையும் நடைமுறைப்படுத்துகிறது. மேலும் ஆங்கிலம் மற்றும் அந்நிய மொழிகளில் உள்ள சர்வதேச தரம் வாய்ந்த கல்விகள் சீன மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு சர்வதேசப் பள்ளிகளில் நடத்தப்படுகிறது.

ஆனால் இந்தியாவைப் பொருத்தவரை சர்வதேசப் படிப்புகள் என்பது கானல் நீராகவே உள்ளது. பல்கலைக் கழகப் படிப்புகள் நெருக்கடி மிகுந்ததாகவும் அடிக்கடி கொள்கைகளை மாற்றிக் கொண்டும்

செயல்படுகின்றன. இதனால் இளம் மாணவர்கள் சர்வதேசப் படிப்புகளில் ஆய்வுப் பணிகளில் ஈடுபட முடியாமல் போகிறது. மேலும் இதற்கான ஆர்வம் இளைஞர்களிடம் குறைந்து காணப்படுகிறது.

இந்தியத் துணைக்கண்டத்தில் 150 பல்கலைக் கழகங்கள் சர்வதேசப் படிப்புகளை நடத்துவதாகச் சொல்லிக் கொண்டாலும் சரியான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாமையாலும் மாணவர்களிடம் மொழிப்புலமை இல்லாமையாலும் அவை பெரும் மாற்றத்தை மாணவர்களிடம் ஏற்படுத்தவில்லை. சர்வதேச இதழ்களில் வெளிவரும் கட்டுரைகளோடு ஒப்பிடும்போது இந்தியா உயர்ந்த இடத்தைப் பிடித்திருப்பதாகக் கூறமுடியவில்லை.

எனவே சர்வதேசப் படிப்புகள் மூலமாக கொள்கை முடிவுகள் குறித்த ஆராய்ச்சிகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும். அதற்கு அரசு சில முன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

முதலாவதாக, தேசிய பொது அறிவு ஆணையத்தின் பரிந்துரைகளை அமல்படுத்திட இங்கேயுள்ள பல்கலைக் கழகங்களில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.

இரண்டாவதாக, சிந்தனையாளர்கள், வெளியுறவுத்துறை, பாதுகாப்புத்துறை மற்றும் உள்துறை அமைச்சர்கள் ஆகியோருக்கிடையில் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

மூன்றாவதாக, இந்திய அறிவு ஜீவிகளை முக்கியமான நாடுகளுக்கு அனுப்பிவைத்து அங்கே சில ஆண்டுகள் தங்கவைத்து அங்குள்ள மொழி மற்றும் கலாச்சாரங்களை அறிந்துவர அரசு எற்பாடு செய்ய வேண்டும்.

நான்காவதாக, நீண்ட நெடுங்காலமாகப் பரிந்துறை செய்யப்பட்டுக் கிடப்பில் போடப் பட்டுள்ள தேசியப் பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தை விரைந்து தொடங்க வேண்டும்.

ஐந்தாவதாக சர்வதேசப் படிப்புகளைத் தரமானதாக வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். மேலைநாடுகளில் உள்ள பெருந்தொழில் அதிபர்கள், அரசை வழி நடத்துபவர்கள் முதலியோரின் பின்னணியில் அறிவுஜீவிகள் இருப்பதைப் பார்க்கிறோம். அதுபோல் இந்தியாவிலும் அறிவு ஜீவிகளை உருவாக்கி அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையில் தேச பாதுகாப்பையும், வெளியுறவுக் கொள்கைகளையும் உருவாக்கி இந்தியப் பொருளாதாரத்தையும் இந்திய அரசையும் வலுப்படுத்தி முன்னேற்றம் காணச் செய்யலாம்.

**CMN சலீம்**

**1/6/2009**